# உயர்தரப் பள்ளியில் மாணவர்களுக்கான வெற்றிகரத் திட்டம் (Students success Program)

ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு விதமாகக் கற்றுக் கொள்கிறான். தற்போது பல புதிய வழிகளில் உயர்தரப் பள்ளியில் கல்வியைக் கற்பதன் மூலம், பட்டப்படிப்பிற்குத் தேவைப்படுகின்ற பாடங்களைக் கற்றுக் கொள்ள இயல்கிறது.

மாணவர்களுக்கான வெற்றிகரத் திட்டம் மூலம், மாணவர்களுக்குப் பலப்பல புதிய யுத்திகள் சொல்லித் தரப்படுகின்றன. இது அவர்களை வழக்கமான வகுப்பறைகளுக்கு அப்பால் கல்வி கற்க உதவுகிறது. இதனால் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு

- வெற்றி பெறும் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன.
- கல்வி கற்கத் தூண்டப் பெற்று அதில் ஒருமுகத்தன்மையை அதிகரிப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது.
- பல்வேறு முறைகளில் பல பாடங்களைக் கற்க இயலுகிறது.

ஒன்றாரியோ உயர்நிலைக் கல்வி மாணவர்களுக்கு தங்கள் விருப்பத்திற்கேற்ற கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

## பிரதான பாடங்களில் விசேட அதிஉயர் அனுபவமுள்ள வல்லுநர்கள் (Specialist High Skills Majors)

குறிப்பிட்ட துறையில் சாதிக்கத் துடிக்கும் மாணவர்கள் தங்களது ஆற்றல் மற்றும் ஆர்வத்திற்கு ஏற்ற வகையில் பாடத்திட்டங்களைக் கற்றுத் தேற சிறப்புத் திறன் மிக்க பாடத்திட்டம் உதவுகிறது. பட்டப்படிப்பில் தேற உள்ள மொத்தம் 30 பாடங்களில் ஒவ்வொரு சிறப்புப் பாடத்திட்டத்திலும் 8-10 படிப்புகள் உள்ளன. இதன் மூலம் வேலைவாய்ப்புகள் அதிகம் உள்ள விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா, கலை மற்றும் பண்பாடு, ஆரோக்கியம் மற்றும் உடல்நலன், கட்டுமானம், உற்பத்தி, தோட்டக்கலை மற்றும் இயற்கை வனப்பியல், தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை போன்ற குறிப்பிட்ட துறைகளில் மாணவர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ள உதவுகிறது.

## விரிவாக்கப்பட்ட கூட்டு அடிப்படையிலான திட்டம் (Expanded Co-Op)

வேலைக்கான பயிற்சி என்பது சிறந்த கல்வி கற்கும் அனுபவம் மட்டுமல்ல. மாணவர்கள் தத்தம் தனி விருப்பம் மற்றும் திறனுக்கேற்ப எதிர்காலத்திற்காகத் தங்களை ஆயப்படுத்திக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பம் ஆகும். தற்போது விரிவாக்கப்பட்ட கூட்டு அடிப்படையிலான திட்டம் மூலம் மாணவர்கள் தமது பெறுபேற்றுக்கான கல்வியைக் கற்றுக் கொண்டிருக்கும்போதே வேலை அனுபவத்தைப் பெறும் வாய்ப்பும் உள்ளது. இதில் தமது டிப்ளோமாவுக்கான இரண்டு கட்டாயப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும். பல்கலை, கல்லூரி, உதவியாளர் வேலை அல்லது பணியிடங்கள் போன்றவற்றில் தங்களின் வேலை வாய்ப்பிற்கான பரீட்சார்த்த ஓட்டம் மாணவர்களுக்குத் தரப்படுகிறது.

## இருவகைப் பெறுபேறுகள் (Dual Credits)

இருவகைப் பெறுபேறுகள் மூலம் உதவியாளர் பயிற்சியில் பங்கு பெறுவதோடு, கல்லூரி அனுபவத்தினைப் பெறும் வகையில் உயர்தரப் பாடசாலைக்குச் செல்லாமலே கல்வி கற்கும் சந்தர்ப்பத்தை விரும்பும் மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இதன் மூலம் உயர்கல்விப்பேற்றினைப் பெறுவதற்கான பட்டப்படிப்பினை படித்துக் கொண்டிருக்கும்போதே கல்லூரியில் சேர்வதற்கும் வாய்ப்பளிக்கப்படுகிறது. அத்துடன் கல்லூரி டிப்ளோமாவையோ அல்லது பயிற்சித்திட்டத்தின் சான்றிதழையோ பெறுவதற்கும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

## 7-9 பிரிவுகளைக் கடத்தல் (தேர்ச்சி பெறுதல்)

ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்தரக் கல்விக்கு மாறியதனால் அவதிப்படும் மாணவர்களுக்கு உயர்தரப் பள்ளியின் புதிய சூழலில் எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்கள் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நடந்து கொள்வது பற்றி தனிக்கவனம் செலுத்தப்படுகிறது.

## மாணவர் வெற்றிக் குழுக்கள்

ஒவ்வொரு உயர்தரப் பள்ளியிலும் அர்ப்பண உணர்வுமிக்க முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் ஆலோசனையாளர் அடங்கிய ஒரு குழு இயங்குகிறது. இதன் மூலம் மாணவர்களுக்குத் தேவையான கூடுதல் கவனம் மற்றும் உறுதுணை அளிக்கப்படுகிறது. இக்குழு பின்தங்கிய மாணவர்களைக் கண்டறிந்து அவர்கள் கற்பதற்கான வழிகளை எளிமையாக்குவதுடன், அவர்தம் முன்னேற்றத்தைக் கண்காணித்து வருகின்றது. அதே நேரத்தில் மாணவர் வெற்றிக் குழுக்கள் மற்ற பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் சமூகத்துடன் பணியாற்றி அதிகளவில் மாணவர்கள் பட்டப்படிப்பிற்குத் தேவையான படிப்புகளில் தேர்ச்சி பெற உதவுகின்றன.

## புதிய பாடத்திட்டங்கள்

பள்ளிகள் புதிய தொழில்நுட்பப் பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதுடன் ஏற்கனவே உள்ள தொழில் படிப்புகளின் திறனை நிர்ணயிக்கும் அளவீடுகளை சேர்த்துள்ளன. விருந்தோம்பல், உடல்நலன் மற்றும் கணினிப் பொறியியல் உட்பட்ட துறைகளில் 200-க்கும் மேலான புதிய தொழில்நுட்பப் படிப்புகள் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட 500 படிப்புக்கள் மூலம் மூன்று லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இவை தவிர, 50 இணையதளப் படிப்புகள் மூலமும் மாணவர்கள் பயனடையலாம். இதன் மூலம் தான் விரும்பும் பட்டப்படிப்பிற்குத் தேவையான படிப்புகளை ஆர்வத்துடன் கற்பதற்கான வாய்ப்புக்கள் மாணவர்களுக்குக் கிடைக்கின்றது.

## மாணவர் வெற்றி கலாச்சாரம்

உயர்நிலைப் பள்ளிக் குழந்தைகள் பட்டம் பெறுவதில் மாநிலம் முழுவதும் உள்ள முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு புது யுத்திகள் மற்றும் புதுமையான அணுகுமுறைகள் மூலம் கல்வி போதித்தலுக்கான அடிப்படைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதன் மூலம் உயர்தர எதிர்பார்ப்புகள் மற்றும் தனிநபர்க் கவனம் போன்றவை சாத்தியமாகிறது. ஆசிரியர்கள் புதிய அணுகுமுறை பற்றி கற்றபின், அவற்றை மாணவர்களுக்குப் போதிக்கும்போது வழக்கமான வகுப்பறைக் கல்விக்கப்பால் மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப மாற்று வழிகளில் சிறப்பாகப் பயிற்றுவிக்க இயலுகிறது.

## கலங்கரை விலக்கத் திட்டம்

முற்றிலும் புதிய முறைகளில் பல உள்ளூர் திட்டங்கள் வழங்கப்படுவதால் மாணவர்கள் பள்ளியில் தங்குவதற்குத் தேவையான உறுதுணையும், தனிக்கவனமும் தரப்படுகின்றது. இதன் மூலம் பள்ளியை விட்டுச் சென்ற மாணவர்கள் மீண்டும் பள்ளியில் சேர்வதற்கான ஊக்கத்தைப் பெறுகின்றனர். மேலும், கல்லூரிகளுடன் இணைக்கப்பட்ட சில திட்டங்கள் மூலம் மாணவர்கள் சில படிப்புகளைப் பயில்கின்றனர்.

**மேலும் விபரங்களுக்கு, உங்கள் பள்ளி முதல்வரை சந்தித்துப் பேசவும். மேலும் விபரங்களைப் பள்ளியின் இணையதளத்தில் ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகளில் பெறலாம்.**

Ontario